1967 ஜூலை 15]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் குறிப்பிடும் விவரங்கள் எனக்குத் தெரியவில்லை. குறிப்பிட்டவர் ரூபாய் 13,533·94 அளவில் கணக்குகளைக் காட்டவில்லை என்று அதன் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் அவர் ஸஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். விசாரணை நடக்கிறது.

மதுரையில் மற்றும் ஒரு கல்லூரி

*352 வினா—**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகரத்தில் உள்ள சௌராஷ்டிரா சமூகக் கல்வி ஸ்தாபனத்தார்களிடமிருந்து மதுரை நகரில் மற்றொரு கல்லூரி ஆரம்பிக்க அனுமதி கோரி விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தொடங்கக் கருதியுள்ள புதிய கல்லூரிக்கு மதுரைப் பல்கலைக்கழகம் இணைப்பு வழங்கியதும் தேவையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 353, 354, 355 தள்ளிவைக்கப்படுகின்றன.

கிணறு வெட்ட மானியம்

*356 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** / **திரு டி. எஸ். ஆதிமூலம் :** } மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிணறுகள் வெட்ட விவசாயிகளுக்கு சப்சிடி, லோன் முதலியன எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

(இ) எந்த ஆண்டு முதல் தரப்பட்டு வருகிறது ?

(உ) ஜில்லாவிற்கு ஜில்லா மாறுதல் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) தற்போதுள்ள ஆணைகளின்படி புதிய கிணறுகள் மானியத்திட்டத்தின் கீழ் கிணறு ஒன்றுக்கு அதிக அளவு ரூபாய் 5,000 கடன் வழங்கப்படுகிறது. கிணறு வெட்டுவதற்கு ஆன செலவில் ரூபாய் 500 க்கு மேற்படாமல் 25 சத வீதம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

(இ) புதிய கிணறுகள் மானியத் திட்டம் 1946-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(உ) இல்லை, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த தாளவாடி பிர்க்காவில் மட்டுமே, கிணறு வெட்டுவதற்கான செலவில் 50 சதவீதம் உதவித் தொகையாக (அதிக அளவு ரூபாய் 1,500-க்கு மேற்படாமல்) வழங்கப்படுகிறது.

திரு. என். சங்கரய்யா : மாநில அரசு 11 லட்சம் டன் அளவிற்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்கிற திட்டத்தைக் கொண்டு இருப்பதால், அந்த வகையில் கிணறுகளும் அதிகப்பட வேண்டும் என்று, கிணறுகளுக்கு அதிகப்படியான உதவிகள் கொடுக்க யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1967–68-ம் ஆண்டில் 300 கிணறுகள் வெட்ட அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று, கூடுதலான தொகைகள் கொடுக்கப்படவேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் ரூ. 20 கோடியளவு உதவி கேட்டிருக்கிறோம். அவர்கள் ரூ. 5 கோடி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இருபது கோடி கட்டாயம் கொடுத்தால் கனம் அங்கத்தினர் யோசனையை முழுமையாகச் செயல்படுத்தலாம். இல்லாவிடில் கிணறுகள் எண்ணிக்கை குறையும்.